| O.S.No. 268/2018 | DW1: திரு. ஏழுமலை த/பெ. திரு. நடராஜன் | 28-01-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. எனது பாட்டி பெயர் அங்கம்மாள். அங்கம்மாளுடன் உடன்பிறந்த சகோதரிகள் அன்னம்மாள், வள்ளியம்மாள் ஆவார்கள். மேற்படி மூவரும் சேர்ந்து சர்வே எண். 416/15 – ல் 60 சென்ட்டினை கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்தினை கிரையம் வாங்கிய நாள்முதல் மூவரும் கூட்டாகத்தான் அனுபவித்து வந்தனர் என்றால் இல்லை. மேற்படி மூவரும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றாலும், நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி 60 சென்ட்டில் மூவருக்கும் தலா 20 சென்ட் உரிமை உள்ளது என்று சொன்னால் சரிதான்.

2. மேற்படி 60 சென்ட்டில் 20 சென்ட்டினை எனது பாட்டி அங்கம்மாள் அடைந்து அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அங்கம்மாளுக்கு 5 மகன்கள், ஒரு மகள் வாரிசுகள் ஆகும். அவர்கள் பெயர் பச்சையப்பன், நடராஜன், சந்திரன், ஜெயராமன், மணி மற்றும் சரோஜா ஆகும். மேற்படி 20 சென்ட்டினை எனது பாட்டி அங்கம்மாள் மேற்படி 5 மகன்களுக்கு மட்டும் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி 5 பேரும், ஆளுக்கு தலா 5 சென்ட் வீதம் அனுபவித்து வந்தனர் என்றால் சரிதான். அந்த சொத்தில் மேலண்டை பாகம் 5 சென்ட் முதல் வாரிசான பச்சையப்பனுக்கு ஒதுக்கினார். அதேபோல், அடுத்தடுத்த வாரிசுகளுக்கு கீழண்டை பக்கம் தலா 5 சென்ட் என்று ஒதுக்கினார். தாவா வரைபடத்தில் A ஷெட்யூல் சொத்தாக குறிப்பிட்டுள்ள சொத்தினைத்தான் அங்கம்மாளின் மகன்கள் 5 பேரும் அனுபவித்து வந்தனர் என்று சொன்னால் சரிதான்.

3. பச்சையப்பன் வடக்கு தெற்கு 85 அடி, கிழக்கு மேற்கு தென்புறம் 22 அடியும், வடபுறம் 24 அடியும் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அதில் பச்சையப்பன் முதலில் குடிசை வீடு கட்டி அனுபவித்து வந்தார். அதன்பின்னிட்டு பச்சையப்பன் இறந்துவிட்டார். பச்சையப்பனுக்கு வாதி ராமலிங்கம், அர்ஜுனன் ஆகிய இருவர் மட்டுமே வாரிசுகள் ஆகும். எனது தந்தை நடராஜன் இறந்துவிட்டார். எனது தந்தைக்கு நான் ஒருவன் மட்டுமே வாரிசு. பச்சையப்பன் இறந்தபிறகு அவரது சொத்தினை அவரது வாரிசான வாதியும், என் தந்தை இறந்தபிறகு அவரது சொத்தினை நான் அனுபவித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். பச்சையப்பனுக்கு பாத்தியமான சொத்தினை வாதி ராமலிங்கமும், அர்ஜுனனும் அனுபவித்து வந்து அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டு அச்சொத்தினை 1-ம் வாதி ராமலிங்கம் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

4. எனது பாட்டி அங்கம்மாளின் சகோதரி வள்ளியம்மாள் அளத்துறை கிராமத்தில் வசித்து வந்தார். அளத்துறைக்கும் மாங்கரணை கிராமத்திற்கும் இடையே சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். வள்ளியம்மாள் உயிரோடு இருந்த காலம் வரையில் மாங்கரணை கிராமத்தில் உள்ள வாதிகளின் வீட்டிற்கு வந்து சென்றார் என்றால் சகோதரி என்ற முறையில் வந்து செல்வார். வள்ளியம்மாளுக்கு வாரிசுகள் யாரும் இல்லை. அதனால், வள்ளியம்மாளுக்கு பாகமான சொத்தினை அங்கம்மாளின் முதல் வாரிசான பச்சையப்பனுக்கு வாய்மொழியாக கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் அவ்வாறு இல்லை. 2-ம் வாதி அர்ஜுனன் வள்ளியம்மாளுக்கு பாகமான சொத்தில்தான் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

5. வள்ளியம்மாள் அவரது பாகத்தினை பச்சையப்பனுக்கு வாய்மொழியாக கொடுத்துவிட்ட காரணத்தினால்தான் 1-ம் வாதியும், 2-ம் வாதியும் அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்துகொண்டு வள்ளியம்மாளின் சொத்தினை 2-ம் வாதி அர்ஜூனன் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பச்சையப்பனுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் 1-ம் வாதி ராமலிங்கம் மெத்தை வீடு கட்டி வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். அது கிழக்கு மேற்கு 16 அடியும், அதற்கு அடுத்து ஆடு மாடு செல்ல 6 அடி விட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். அதேபோல்தான், மற்ற வாரிசுகளும் வீடு கட்டிக்கொண்டு ஆடு, மாடு செல்ல வழிவிட்டு அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான்.

6. 1-ம் வாதி ராமலிங்கம் கிழக்கு மேற்கு 16 அடி வீடு கட்டி, அதற்கு அடுத்து ஆடு, மாடு செல்ல 6 அடி வழி விட்டுள்ள நிலையில் அதில் நான் வீண் வம்பு பிரச்சனை செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பி.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்றதாக கூறி நான் வாதிகளிடம் பிரச்சனை செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஜெயராமனுக்கு 5 சென்ட்டிற்கு கூடுதலாக பட்டா கொடுக்கப்பட்டது என்றாலும், நான் அவரிடமிருந்து 5 சென்ட்டிற்கும் கூடுதலாக இருந்த சொத்தினை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அங்கம்மாளின் வாரிசுகளான 5 பேருக்கும் தலா 5 சென்ட் வீதம் பட்டா கொடுக்கவில்லை என்றாலும், ஒரு சிலருக்கு கூடுதல் விஸ்தீரனம் கண்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான், பச்சையப்பன், நடராஜன் ஆகியோருக்கு குறைவாக இருந்தது, மீதமுள்ள 3 பேருக்கு கூடுதலாக இருந்தது.

7. பட்டாவில் விஸ்தீரனம் பற்றிய குறைபாடுகள் இருந்தால், அதுகுறித்து வருவாய்த்துறையினரிடம் மனு கொடுத்து பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும் என்று சொன்னால் சரிதான். எனக்கு விஸ்தீரனம் குறைவாக இருந்தது என்றும், ஜெயராமனுக்கு அதிகமாக இருந்தது என்றும், அதனை திருத்தி தர வருவாய்த்துறையினரிடம் மனு ஏதேனும் அளித்தீர்களா என்றால் இல்லை. எனக்கு பட்டாவில் விஸ்தீரனம் பற்றிய குறைபாடு இருந்திருந்தால் நான் வருவாய்த்துறையில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், நான் வாதிகளின் விஸ்தீரனத்தில் தலையிட்டு வேண்டுமென்றே வீண் பிரச்சனை செய்து வருகிறேன் என்று சொன்னாலும், மேற்கொண்டு ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

8. பி.சா.ஆ.2 ஆவணத்தில் ஜெயராமனுக்கு கூடுதல் விஸ்தீரனத்தில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், அந்த கூடுதல் விஸ்தீரனத்தை நான் கிரையம் வாங்கியதாகவும் வாசகம் ஏதேனும் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ.2 ஆவணத்தில் சொத்தின் அளவுகள் கண்டு எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 1-ம் வாதி ராமலிங்கத்திடம் வீண் பிரச்சனை செய்வதற்காகத்தான் பி.சா.ஆ.2 ஆவணத்தினை ஏற்படுத்தினேன் என்றாலும், அதனால்தான் அதில் சொத்து பற்றிய விவரம், அளவுகள் சரியாக குறிப்பிட்டு எழுதவில்லை என்றாலும் சரியல்ல. ஜெயராமன் அவருக்கு உண்டான 5 சென்ட்டினை அவரது மகனுக்கு தான செட்டில்மெண்ட்டினை 2017-ம் ஆண்டு எழுதி வைத்தார். ஜெயராமன் அவருக்கு பாகமாக 5 சென்ட்டினை அவரது மகனுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்ததற்கு பிறகு

ஜெயராமனுக்கு சொந்தமான சொத்து எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

9. ஜெயராமன் அவரது மகனுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததற்கு பிறகு அவருக்கு சொத்தில் ஏதும் உரிமை இல்லாத நிலையில் அவரிடமிருந்து நான் பி.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை எழுதி பெற்றிருப்பது மோசடியான ஒன்று என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது எனது மகன் பெயரில் பி.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தேன் என்றால் எனது உடல்நிலை சரியில்லாததால் நான் எழுதி வைத்தேன். நான் நல்ல உடல்நிலையில் உள்ளேன் என்றாலும், 1-ம் வாதியுடன் அடாவடி செய்யவேண்டும் என்ற காரணத்திற்காகவே பி.சா.ஆ.4 ஆவணத்தை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா B ஷெட்யூல் சொத்து 1-ம் வாதிக்கு தனிமையில் பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அதில் நான் வீண் வம்பு செய்து பிரச்சனை செய்து வருகிறேன் என்றாலும், அச்சொத்தில் நான் எவ்வித உரிமையும் கோரமுடியாது என்றாலும், அதனால் வாதிகளின் வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.28 16:14:11 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**